## பாலகனின் பிறப்பு

நாயகன் இயேசுவை நாவினால்
புகழ்ந்து பாடுவோம் – பாலகன்
பிறந்த செய்தியை பார் எங்கும் பறை சாற்றுவோம்

கடும் குளிரையும் பொருட்படுத்தாது
கள்ள மற்ற சின்னஞ்சிறு மலர் – பூத்ததோ
நம் மனங்களில் மணம் கமழ

தூதர்களும் துரிதமாய் தூயவரைப் பற்றி பறைசாற்ற
ஆட்டிடையார் பயந்து வானம் பார்க்க
செய்தியை கேட்டு செயலற்ற நிலையில் – இன்பக்களிப்புற

விண்மீன்களும் வழிகாட்டி வழி நெடுக
வாழ்த்துரைத்து செல்ல, பெத்லேகேம்
மாட்டு தொழுவத்தில் பிறந்த பாலகனை தோய்வின்றி துதிக்கவும்

பெத்லகேமில் பெற்ற தாயும் பெரும் மகிழ்ச்சிக் கொள்ள
தந்தையும் தலைவணங்கி தாலாட்ட
ஆட்டிடையர் ஆனந்தமாய் ஆர்பரித்துப்பாட

ஆடுகள் அங்கும் இங்குமாய் அசைய
புல்லணையில் பூத்த சிறு மலரை
வானவரும் வந்து தலைவணங்க

இராஜாக்களும் பாலகனின் பிறப்பை கண்டு நடுங்க
எருசலேம் நகரமே ஆனந்த களிப்பில் ஆர்ப்பரிக்க
பாலகன் பிறந்த பாரினில் பாடல்கள் பாடுவோம் பரவசமாய்

வறியவருக்கு ஈந்து மகிழ, இந் நந்நாளில்
அற்பணிப்போம் அன்போடு நம் செல்வங்களை
துதியோடு துதித்திடுவோம் நம் தூயவரை

**- பா.ஏவாள் மோனா மெட்டில்டா**



# டிசம்பர் மாதம் – 2016

## ஆயரின் கிறிஸ்துமஸ் செய்தி

ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இம்மாதம் நம் அனைவருக்கும் மிகுந்த சிறப்பான மாதமாகும் காரணம், கிறிஸ்து நமக்காக பிறந்தார் என்பதே அதற்குரிய காரணம். இந்நாளில் கிறிஸ்மஸ் என்பது என்ன என்று பார்க்கும்பொழுது,

Christmas is a Birthday of Longing
Christmas is a Birthday of Life
Christmas is a Birthday of Light

ஆக, எதிர்பார்த்திருந்த இயேசு ஒளியாக, வாழ்வாக வந்ததே கிறிஸ்மஸ் என்பதாகும். இனி வரும் நாட்களில் சபையின் அனைத்து ஆராதனைகளிலும், அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்

**Rev. Daniel S.Chelladurai**

# கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

**சங்கராபரணம்** **ஆதிதாளம்**

ஆசிரியர் : **காபிரியேல் உபதேசியார் ( 1820- 1885)**

பிறப்பிடம் : **பார்வதியாபுரம், திருநெல்வேலி மாவட்டம்**

**பணி:** தமிழ், ஆங்கிலம் சமஸ்கிருதம் கிரேக்கம், லத்தீன் மொழிகளில் புலமைபெற்றவர். **சாராடக்கர்** கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியும், தன்னை உபதேசியார் என அழைப்பதையே பெரும் மதிப்பாகக் கருதினார். 16ஆம் நூற்றாண்டில் சவேரியர் சபை ஊழியரை கணக்கப்பிள்ளை என்றார். 1906இல் மதுரா மிஷனில் உபதேசியார் எனப்பட்டனார். அக்காலத்து உபதேசியார்களின் பெருமையை நாம் உணர அவர் உதவுகிறார். மிஷனரிகளுக்கு தமிழ் கற்பித்ததால் முன்சியார் பட்டமும் பெற்றவர். அக்னி மூழ்கிய மூவர் உன்னதப்பாட்டு நூலை விளக்கும் ஞான கீதம் இரண்டு நூல்களையும் பல கீர்த்தனைகளையும் எழுதியுள்ளார். கிடைத்துள்ள 6 பாடல்களில் 3 சிஎல்எஸ் - இல் இடம்பெற்றுள்ளது. தமது 65 ஆம் வயதில் 1985 இல் காலாரா நோயினால் இறந்தார்.

**பாடற்குறிப்பு:** சொல் நயமும் இசை நயமும் இறையியல் தத்துவங்கள் அடங்கிய இப்பாடல் சிட்டா சுரத்துடன் பாடுவதற்கு ஈடாய் சொற்களை அமைத்துள்ளதால் இன்று, சாதாரண கிறிஸ்தவர்களும் தெளிவாகப் பாட முடிகிறது.

**பல்லவி:** (ஆதி) - முழு முதற்கடவுளை பிதா என்றும் அனுபல்லவி இயேசுவைக் குமாரனென்றும்,தேவன் ஆவியாயிருக்கிறார் குமாரனும் தூய ஆவியினால் மரியாள் வயிற்றில் தோன்றினார். அவர் ஆவியை நமக்கு அனுப்பினார் அனுப்பிவருகிறார். இனியும் அனுப்புவார். ஆவியானவரையும் சேர்த்து (திரி) - மூன்று ( ஏக ) ஒன்றேயாகிய கடவுளுக்கு ( அனவரதமும் ) எப்பொழுதும் (தேத்திரம்) புகழ்ந்து வணக்கம் செய்கிறேன்.

**அனுபல்லவி :** ( நீத ) நிதியுடையவரான (சர்வ ஈசன்) எல்லா உயிர்களுக்கும் நாதன் - கடவுள் ( நிதமும் ) எந்நாளும் தொழுபவரின் இருதயமாகிய மலரில் தேனும் மணமும் இருப்பது போல் தங்கி (வாசன்) வாசம் செய்கிறார். உண்மை நிறைந்தவர் (ஞான) மெய்யறிவு தருபவர் (மனோகரா ) - அழகர் மனம் விரும்பிடும் தன்மை உடையவர். திருமறை நெறியில் என்றும் ( உறைந்த ) நிறைந்த வாழ்பவர். நீண்ட கடலின் அலை ( பாவம் ) சூழும் (மேதினியை) உலகத்தை மூடி இருக்கும் பாவ இருளை (ஒடவே) நீக்கவே அருள் செய்யும் என்கிறார்.

**சரணம் 1 :** (எங்கனும்) எங்கும் நிறைந்திருப்பவர் (இறைவனின் மூன்று சிறப்புத் தன்மைகளில் ஒன்று எக்காலத்தும் பக்தர்களால் ( பணி + பாதர் ) தொழும் திருப்பாதங்களை உடையவர். ( துங்க ) உயர்ந்த பெருமை, தூய்மையான (மாமறை) சிறந்த திருமறை (போதகர்) - ஞான முள்ளவர். (கடைசி) , இறுதி நாளில் (உலக முடிவில்) (நெடுசோதனைசெய்) அதிநீதர் நடுவாக இருந்து விசாரித்து மோட்சமோ நரகமோ கொடுக்கும் சிறந்த நீதிபரர் (பங்கில்லான்) எதுவும் தேவைப்பட்டாரில்லை (தாபம்) துன்பம் இல்லான் (அடி) தொடக்கமும் (முடி) முடிவும் (புகர்) சொல்வதற்கில்லாதவன். (பன் ஞானம்) எல்லா அறியும் ( சம்பூரணம்) முழுமையை உடையவர், தூய்மை நீதி ஆகிய பண்பினை உடையவர் (சுயம்பு) தானாகப் பெற்றவர் (விவேகன்) அறிவுடையவர். அன்பும் இரக்கமும், தயாளமும் (பிரவாகன்) வெள்ளம் போன்ற - கடல் போன்று தம்மிடமுள்ளதைச் சிலுவையில் வெளிப்படுத்தியவர். இவ்வுலகின் படைப்பு மீட்பு, மற்றும் ( பரிபாலனம் ) பாதுகாப்பு - ஆளுமையைப் பண்பாய் நடத்தி அருளுகின்ற திரியோகருக்கு தோத்திரம்.

**சரணம் 2 :** சுத்த நீதியைக் கையாண்டு நம்மை நாம் ( நீணிலத்) நீண்ட விரிந்த உலகத்தில் அல்லாமல் அழிந்து (தீதுறு ) தீமை - தீங்கு கொடுக்கும் (நரகில்) நரகத்தில் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அடைவோம் என்று தேவனின் என்று தேவனின் திருக்கருணை உள்ளம் எண்ணியதால் (பாதகர்க்கு) பாவிகளாகிய நமக்கு உயிர் கொடுக்க இயேசுவை பாலகராக அனுப்பிய (பரன்) பரமபிதா நம்மீது வைத்த தயவு தெளிவாகிறது. இவ்வளவாக அன்பு கூர்ந்தார் என்ற திருமறைவாக்கினைப் பாடலாக்கினார். (யோவா.3:16)
சஞ்சலங்கள் இடையூறுகளை (இடைஞ்சல்கள்) தடைகள் வரும்போது (பகர்ந்த) கூறிய, வேண்டிய முறையிட்ட ஜெபித்த (தன்னடியார்) - பக்தர்களுக்கு (உரு) துன்பம் வரும்போது (தயவாகையில்) தயவு செய்பவராய் உதவியவராய் உலகில் ஏற்படும் (அஞ்ஞான) - அறிவில்லாத அறியாத தற்செயலால் ஏற்படும் விபத்து, வியாதி முதலிய (சேதம்), இழப்புகளை இருளை நீக்கும் சூரியன் போல், நீக்க பக்தர்களை வாழ்விக்கும் திரியேகனே என்கிறார்.

இப்பாடலை தயானந்தன் பிராசின்ஸ் கூறுகையில் மாதுளைசுளைப்போல் சொற்கள் இணைந்து சிறந்து விளங்குவதில் ஆசிரியரின் சொற்களஞ்சியப் பெருக்கும் நினைவுத்திறனும், திருமறை சார்ந்த, இறையியலும் வெளியாகிறது. கிறஸ்தவ அருட்கவிஞர்கள் சி.எல்.எஸ், 1984, பக்கம்.195

குறிப்பு: அனுபல்லவியிலும், சரணங்களிலும் இறுதி நான்கு அடிகளில் சிட்டாசுரத்திற்குச் சொற்களமைத்து பாடியுள்ளார். அடிமோனையும் எதுகையும் அமைத்துள்ளார்.

**- Nishada's**

ஆதாரம்: CLS Publications

## “அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ்”

வானவர் இயேசுவின் நாமத்தில் நமது சபை மக்களுக்கு கிறிஸ்துமஸ் மற்றும் ( 2017 ஆம் ஆண்டு ) புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இயேசு டிசம்பர் 25 -ம் தேதி பிறந்தார் என்று வேதத்தில் குறிப்பிடவில்லையே! என சில ஆவிக்குரிய அறிவாளிகள் கேள்வி கேட்டு, அலுத்துப்போய், அவர்களும் கொண்டாட ஆரம்பித்துவிட்டனர். “இயேசு, என்னை பாவங்களிலிருந்து மீட்க, வானாதிவானங்களைவிட்டு பூமியில் வந்தார், மாம்சத்தில் வெளிப்பட்டார் - யோ - 1 : 1 ஆக டிச’25ம் நாள் நாம் கொண்டாடவில்லை. கிறிஸ்து எனக்காக பிறந்தார் என்பதனை ஆராதிக்கிறோம். ரோ-14: 5,6 கூறுகிறது” நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான், விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான்” என்று

## கொண்டாடுவது அவரவர் விருப்பம்

உலகிலேயே யூதர்கள் மட்டும்தான் தங்களது குடும்ப வரலாறுகளை எழுதி, பாதுகாக்கும் பழக்கமுடையவர்கள், ஆகவேதான், இயேசுவைப் பற்றியும், ஆதாம் முதல் இன்றுவரை இதை கடைப்பிடித்து வருகிறார்கள். மத் 1 : 1 இல் ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனை இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு என் “புதிய ஏற்பாடு” ஆரம்பமாகிறது. மேலும் 42 வது தலைமுறையில் இயேசு பிறந்தார் என மத் - 1 : 17 கூறுகிறது.

சரித்திரப்பூர்வமாக இயேசு பிறந்தது நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை. கி.மு./கி.பி. என உலக சரித்திரமே இவரைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டது. காரணம், இவர் “சிருஷ்ட்டிக்கர்த்தா”! அதை யாரால் மாற்ற முடியும்.

கிறிஸ்துமஸ்! தன்னையே கொடுத்து அன்பு கூர்ந்தார். (யோ- 3 : 1) கொடுக்காமல் அன்பு கூற முடியாது, அன்பு கூறாமல் கொடுக்க முடியாது. இந்த நன்னாளில் ஏழை, எளியோரை தேடிச் சென்று உதவிகள் செய்வோம், உணவளிப்போம் - அதன் பின் இயேசுவை அறிவிப்போம்.

என்றும் கர்த்தரின் பணியில்
**உங்கள் சகோதரன், கிளாட்வின் பிரபாகரன்**
செயலர்



“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்: நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோலின் மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர் ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானபிரபு என்னப்படும் - ஏசாயா 9:6

கர்த்தனாகிய இயேசு கிறிஸ்து நாமத்திலே திருச்சபையின் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள் வருகின்ற 2017 ஆம் ஆண்டு திருச்சபையார் அனைவருக்கும் இயேசு கிறுஸ்த்து தாமே அதிசயங்களை செய்கிறவராகவும், ஆலேசனை கர்த்தராகவும், வல்லமையுள்ள தேவனாகவும் நித்திய பிதாவாகவும், சமாதான பிரபுவாகவும் கூட இருந்து மகிமையாக நடத்துவாராக...

என்றும் கர்த்தரின் பணியில்
**M.T. ரிச்சர்ட் தாமஸ்**
பொருளர்

## வருந்துகிறோம்




மாண்புமிகு, தமிழக முதல்வர்

டாக்டர்

# ஜெ.ஜெயலலிதா

அவர்கள்

05.12.2016 அன்று இரவு 11.30 மணியளவில்
காலமானார்

அவருக்கு இத்திருச்சபையின் சார்பாக
ஆழ்ந்த இரங்கலையும் வருத்ததை
தெரிவித்துக் கொள்கிறோம்.

# டிசம்பர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.12.2016<br>சனி | காலை<br>5.30 மணி | வாக்குதத்த ஆராதனை<br>கொடியேற்றம் | -<br>- | அருள்திரு. டானியல்<br>S.செல்லதுரை |
| 04.12.2016<br>ஞாயிறு | காலை<br>8.30 மணி | திருவிருந்து ஆராதனை<br>கடவுளின் வார்த்தை<br>**ஐக்கிய சங்கங்களின் பாடல் ஆராதனை** | எரேமியா 36:1-10<br>லூக்கா 1: 5 - 17 | அருள்திரு.டானியல்<br>S.செல்லதுரை |
| 11.12.2016<br>ஞாயிறு | காலை<br>8.30 மணி | இம்மானுவேலின் வாக்கு<br>**வெகுமதி ஞாயிறு**<br>குடும்ப கீத ஆராதனை | ஏசாயா 7:10-17<br>மத்தேயு 1:18-25 | திரு. பால் பன்னீர்<br>செல்வம் |
| 18.12.2016<br>ஞாயிறு | காலை<br>8.30 மணி | அகமகிழ்வோம்<br>இயேசுவின் வருகையில் | மீகா 4:1 -4<br>யோவான் 4:21 - 37 | அருள்திரு.டானியல்<br>S.செல்லதுரை |
| 18.12.2016<br>ஞாயிறு | மாலை<br>5.00 மணி | **கிறிஸ்மஸ் மரவிழா** | | சிறப்பு செய்தியாளர் |
| 25.12.2016<br>ஞாயிறு | காலை<br>4.30 மணி | **கிறிஸ்து பிறப்பு**<br>திருவிருந்து ஆராதனை<br>கிருபைமேல் கிருபை | ஏசாயா 9:6<br>லூக்கா 2: 1 - 14 | அருள்திரு. டானியல்<br>S.செல்லதுரை |
| 31.12.2016<br>சனிக்கிழமை | இரவு<br>10.30 மணி<br>இரவு<br>11.30 மணி | **சாட்சி துதி ஆராதனை**<br>**பழைய வருட ஆராதனை** | | திரு. கிளாட்வின் பிரபாகரன்<br>திரு. A.ஜோசப்<br>லே லீடர் |
| 01.01.2017<br>ஞாயிறு | அதிகாலை<br>12.00 மணி | **புதுவருட வாக்கு தத்த ஆராதனை**<br>(திருவிருந்து வழிபாடு) | | அருள்திரு. டானியல்<br>S.செல்லதுரை |

# BIRTHDAYS IN THE MONTH OF DECEMBER

| | | | |
|---|---|---|---|
| December 1 | Baby B. Jane Adventia | December 15 | D.Jerlin Shiny |
| | Mrs. Ruby Angeline Devaram | | Mrs.Kamalini Anish |
| | Miss. Sharon Devarom | | Mr.S.Karthik |
| December 2 | Mr. Rani Valsan | December 16 | Master.Solomon Pradeep |
| December 3 | Mr. D.E.Sundar | December 17 | Mr. C.David Immanuel |
| December 4 | Mr. A.Jeyaseelan | December 18 | Miss. A. Agnes Lydia |
| December 5 | Mrs. Esther | December 21 | Master. Jeno Jeslin |
| December 6 | Mr.J.Arul Raj | | Miss. Judith Nurita |
| December 7 | Mrs. Felicia Gladice | | Mrs. Shirley |
| | Rev. Felix N.Sugirtharaj | December 22 | Mrs.Jessie Aaron |
| December 8 | Master. Paul Manuel Raj | | Mrs. Joice Samuel |
| December 8 | Miss. Samantha Isaac | | Master. Christopher Felix |
| December 9 | Master.P.Solomon Rajan | December 23 | Mrs. Mary Metilds |
| December 10 | Esther Juliet Sathya Vasuki | | Mrs. V.Mary Syria Pushpam |
| | Esther Juliet | December 24 | Mrs. Latha Bai |
| December 11 | Mr. Michel Babu | December 25 | Miss.A. Angelin |
| | Mr.A.Moses | December 26 | Master. Bennett |
| | Mrs. J.T.Lalitha Manoharan | December 27 | Mrs. Geetha Henry |
| | Mrs. B. Angel Sathya | December 29 | Miss. Mercy Brianna Rebecal |
| December 14 | Mr. Timothy Jabez | | Ms. P.Blessy |

## WEDDING DAYS IN DECEMBER

| | |
|---|---|
| December 02 | Mr.C.Sam Vincent & Mrs. Stella |
| December 07 | Mr.P.Sundaram & Mrs. Esther |
| December 10 | Mr.Illango Devaram & Mrs. Ruby Angelin Devaran |
| December 16 | Mr.E.Arul Raj & Mrs.A.Selvamalar |
| December 26 | Mr.Elson Samuel & Mrs. Joyce Metilda |
| | Mr.J.Justin & Mrs. J. Merril Jeminah |
| December 27 | Mr.A.Jaya Kumar & Mrs. Jeba Rani |
| December 28 | Mr.J.John & Mrs. P.Hasheela John |
| | Mr. S.Jenkins Dinesh & Mrs. G.Johan Prasanna |
| | Mr.V.Richards Moses & Mrs. R.Godwin Shiny |
| December 30 | Mr. Sam Yesudhas & Mrs. Rajala Sam |



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

## மக்களோடு மக்களாக வாழுவோம்

**லெஸ்லி நியூபிகின்**
முன்னாள் சென்னைப் பேராயர்



1909 - 1998

வெள்ளை உருவம் கொள்ளை கொள்ளும் பார்வை கற்றோரும் காது கொடுத்து கேட்கும் பேச்சு. அலை போன்ற தமிழ் ஓசைக்கு சொந்தக்காரர். சிந்தனையாளர், திருச்சபையின் வழிகாட்டி, இறைவனின் அருட்கொடை அவர்தான் பேராயர் **லெஸ்லி நியூபிகின்**

1909ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் நாள் இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இறைவனைத் தேடும் வாஞ்சை இளம் வயதில் ஏற்பட்டது. இறையியல் படிப்பைத் தொடர்ந்தார். கிறிஸ்தவ இயக்கத்தில் இணைந்தார். கிறிஸ்துவின் நற்செயதியை உலகமெங்கும் கூறும் ஆர்வம் இவரை உந்தித் தள்ளியது.

1936ஆம் ஆண்டு திருமணமான தன் இளம் மனைவி ஹெலன் அம்மையாருடன் இந்திய புறப்பட்டு வந்தார். இறையருளால் உந்தப்பட்ட இவர் தமிழைச் சரளமாகப் பேசும் கலையில் தேர்ந்தார்.

1947 ஆம் ஆண்டு மதுரையில் பேராயராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1965ஆம் ஆண்டு சென்னையிலும் பேராயராகப் பொறுப்பேற்றார்.

இவர் பதவி என்ற சிங்காசனத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்தவரல்ல. மாறாக பிறர் வாழ்வோடு இணைந்து அவர்கள் வாழ்வையும் சிறப்பித்தவர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களை தேடிச்சென்று அவர்களோடு தங்கி அவர்கள் குறைகளைக் களைந்தவர். கிறிஸ்துவின் சொல்லை அனுதினமும் செயலில் காட்டியவர். தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலனய் விளங்கி, சாதி ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கப் பாடுபட்டவர். நீதிக்குக் குரல் கொடுத்தவர்.

தென்னிந்திய திருச்சபையை புகழின் உச்சிக்கு உயர்த்தியவர். இவர் ஓர் சிறந்த எழுத்தாளர். இவரது அருளுரைகள் இன்றும் எண்ணற்றவரால் பயன்படுத்தப்படுகின்றன.

வாழ்வு முழுவதும் மனித நேயத்தை மனிதருக்குக் கற்பித்த பேராயர் லெஸ்லி நியூபிகின் அவர்கள் 1998 ஆம் ஆண்டு ஜனவரி 30ல் இறைவனில் ஐக்கியமானார்.

அன்பரே! உமது பிறப்பு சிறப்பாக்கப்பட என்ன முயற்சி செய்கிறீர்?

ஒற்றுமையின் சீர்குலைவுக்கு வித்திடுகிறவர்கள்
சுவிசேஷத்தின் எதிராளிகள்.
– லெஸ்லி நியூபிகின்

தொகுப்பு
EVA. **பால் பன்னீர் செல்வம்**
(வேதாகமநண்பன்)

# வேத வினா - விடை போட்டி

**டிசம்பர் மாத கேள்விகள்**

**( வசன ஆதாரம் தரவும் )**

**I பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| I. | கிதியோன் | a. | இரட்சிப்பு |
| ii. | யோசேப்பு | b. | தகப்பன் |
| iii. | பர்சிலா | c. | விடுதலை |
| iv. | நியாயாதிபதிகள் | d. | நம்பிக்கை |
| v | அபினதாப் | e | இராஜாவின் பிரதாணி |
| vi | பெத்தேல் | f | யெகோவாஷாலோம் |
| vii | செப்னா | g | ஆலோசனைக்காரன் |
| viii | இயேசு | h | சவுலின் குமரன் |
| ix | பிக்தான் | i | தாவீது இராஜா |
| x | எமோரியன் | j | பொர்கிஷதாரி |

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 18-12-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை - 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**


திருச்சபை மக்கள் அனைவருக்கும்

**கிறிஸ்மஸ் - 2016 *மற்றும்* புத்தாண்டு - 2017**

நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்



# சென்ற மாத போட்டியின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | தரித்திரம் | நீதி 6:9 - 11 |
| 2. | அறுப்புண்டு போகுதல் | லேவி 20: 6 |
| 3. | நரக அக்கனி | யாக்கோபு 3: 16 |
| 4. | ஆஸ்தீயை அழிக்கிறான் | லூக்கா 15:30 |
| 5. | கெட்டுப் போகுதல் | எபிரேயர் 10: 39 |
| 6. | நியாதிபதிகள் | 18: 6 |
| 7. | I இராஜக்கள் | 1: 53 |
| 8. | II சாமுவேல் | 5: 6 |
| 9. | நெகேமியா | 2: 19 |
| 10. | ஆதியாகமம் | 32:13 - 18 |

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. லீலா டிக்சன்
5. திருமதி. ஜுபிலி தர்மராஜ்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
7. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
8. திருமதி. மெரில் ஜெமிமா

## படித்ததில் பிடித்தது...

If god answers your
prayers,
he is increasing your
faith:
If god delays,
He is increasing your
patience:
If God doesn't answer
He has somethings
better for you!